THE

GARDEN OF THE HEART.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
9-MAY 1912
MADRAS.

இதய சிங்கார வனம்

AN ANGLO-VERNACULAR MAGAZINE FOR WOMEN AND GIRLS.

April, 1912.

CONTENTS.

To our Readers - THE EDITORS.
Our Own Queens, with Portrait of Queen Mary - MISS PARSLEE.
The Garden of Souls MISS A. HARVEY.
A True Mother and what she can do. MISS E. LAKHSMI GOREH.
Needlework Patterns—
Knitted Glove.
Crochet Edging.
A Talk about the Stars MR. J. HARVEY.
Some Lessons from the Divine Teacher.

WOMEN'S AUXILIARY OF THE C.L.S. FOR INDIA,
35, John Street, Bedford Row, London, W.C.

இந்திய ஸ்திரீகளுக்கான பத்திரிகை

இதய சிங்கார வனம்

உவாட்டன், தீவர் என்ற கன்னிகா பெருமாட்டிகளால் நடைபெறுவது

வயது I | எப்பிரல் 1912 | இலக்கம் 2

வாசிப்போருக்கு

பிரிய சகோதரிகளே,

நாம் ‘சிங்கார வனத்தில்’ சேர்ந்து உலாவப்போனது இப்போது மூன்று மாதங்களாகிறதினால் இன்னொருமுறை அங்கு உலாவ உங்களுக்கு ஆசையிருக்கும். எம்முடன் வந்து அங்குள்ள பழங்களையும் பூக்களையும் பறிக்க விரும்புவோருடைய தொகை மேலும் மேலும் அதிகரிக்கவேண்டும் என்பது எம் விருப்பம். நீங்கள் நம் ‘சிங்கார வன’ப் பத்திரிகையைப் படித்தபின் அதை உங்கள் மித்திரிகளுக்கும் அயலாருக்கும் கொடுத்துப் படிக்கச் செய்தால் அவர்களும் ஒருகால் வாங்குவார்கள். பத்திரிகையை வாசிப்போரிலக்கம அதிகரித்தால் அதை இனிக் காலவருஷ வர்த்தமானி அல்ல மாதாந்த வர்த்தமானியாக்கலாம்.

இதற்கு நமக்குத் தெரிந்த ஒவ்வொரு மாதுசிரோமணியையும் பத்திரிகையை வாங்குகிறவர்களுடைய பட்டியில் பேருள்ளவராக்கவேண்டும்.

ஆரம்பத்திலேயே பத்திரிகை வாங்காதவர்கள் முந்தின நம்பர்களையும் வாங்கவேண்டும். அல்லாவிட்டால், தொடர்ச்சியையுடைய வியாசங்கள் ஆரம்பத்திலிருந்தே படிக்கப்படாமையால் விளங்காமலும் பயனில்லாமலும் போகும்.

ஜனவரி௴ நாம் பிரசுரித்த முக்கிய சம்பவம் அதற்கு முந்தின ஜூன்௴ உவெஸ்ட் மினிஸ்டர் ஆபேயில் நிறைவேறின இராஜமகுடாபிஷேகம். இப்போது நம் சக்கரவர்த்தியார் இந்தியாவிற்கு விஜயம்செய்து, டில்லிமாநகர மகா வைபவங்களிடையில் தம் பட்டமகிஷியார் அருகிருக்க தம் பென்னம்பெரிய பூமண்டலத்தில் முக்கிய பாகமாகிய இப்பகுதி க்ஷேமமாயிருக்கவேண்டுமென்பதை தம் மனதில் ஆழ்ந்து குறித்திருப்பதாய்த் தம் இராஜ தயாள வார்த்தையினாலும் பட்சம் நிறைந்த செயலாலும் விளம்பரப்செய்தார்.

இந்தியாவின் பிரசைகளும் தங்கள் சக்கரவர்த்தியார்மீது தங்களுக்கிருக்கும் இராஜபக்தியும் அன்பும் எவ்வளவு உறுதியும் உண்மையுமானது என்பதை தெரியப்படுத்தினார்கள். தங்கள் மகாராணியார் தங்கள் தேசத்திற்கு வந்து தங்கள் நடுவில் வாசம் செய்துபோனதை இந்தியாவின் மேன்குல பெருமாட்டிகள் மிகவும் நன்குமதித்திருப்பார்கள் என்பது சொல்லவேண்டுவதில்லை. மகா இராணியார் தங்களுக்குச் சொன்ன விநய மொழிகளை அவர்கள் தங்கள் உள்ளமாகிய அருங்கலப்பெட்டியில் நெடுநாள் வைத்துப் பேணுவார்கள் என்பதும் திண்ணம். அவற்றுள் சில திரும்பச் சொல்லத்தக்கவை.

மகாராணியார் அவர்கள் சொன்னது: ‘அந்தர்ப்புரவாசிகள் சீரும் செல்வமுமாய் வாழவேண்டும் என்பதைக்குறித்து எனக்குள்ள கவலை நாளுக்கு நாள் அதிகப்படுகிறதை உங்களெல்லாருக்கும் தெரியப்படுத்துகிறேன். இந்திய ஸ்திரீகள் தங்கள் தங்கள் வீடுகளில் மிகச் சிறந்த குணசீலங்களை விளைவிக்க வல்லவிகள் என்பதைச் சரித்திராகமங்கள் தெரிவிக்கின்றன. தாய்மார் தம் பாலர்களுடைய இருதயத்திலும் மனதிலும் இளமைதொட்டுப் பதிவித்தநற்பாடங்களின் விளைவென்னவெனில், அவர்கள் ஆளானபிறகு தம் அரசர்களுக்கு மனப்பூர்வமான பக்தியும் அரசசேவையில் சிறந்த ஒழுக்கமும் உடையவர்களாய் விளங்கினதாம். இது இத்தேசத்து மேன்மையான சாதிகளின் வரலாறுகளிலே வெளிப்படும். பரோடாவுக்குள் வசிப்போர் சிறகச் சிறக முன்னேறி மேம்படுவதை பெருவகையுடன் தெரிந்துகொண்டேன். நீங்கள் யாவரும் உங்கள் பெண்மக்களுடைய கல்வியை விரும்பி வளர்த்து, அவர்கள் பருவமடைந்தபின் தங்களுக்கு இனி வாய்க்கும் வரர்களுக்கு உபயோகமும் அறிவுச்சிறப்பும் உள்ள மனையாட்டிகளாயிருக்க ஆசிக்கிறீர்கள் என்பது என் மனதிற்கு நிச்சயப்பட்டிருக்கின்றது.’

இந்த இலக்கத்தில் ‘நம் மகா இராணிமார்’ என்னும் பெயரின்கீழ் மேரி மகா இராணியின் சுருக்கச் சரித்திரம் வருவதைப் பிரியமாய்ப் படிப்பீர்கள்.

உங்களுக்குச் சகலாசீர்வாதங்களும் வர விரும்புகிற, உங்கள் அன்புள்ள சிநேகிதிகள்,

பத்திராசிரியையர்.

The Garden of the Heart.

Edited by Miss Wauton *and* Miss Dewar, *late of Amritsar.*

VOL. I. APRIL, 1912. No. 2.

To our Readers.

Dear Sisters—

As it is three months since we took the last walk in our "Garden," you are, no doubt, now ready for another. We should like to see the company of those who come to gather its fruits and flowers ever increasing in number. If you will show your copy of *The Garden* to friends and neighbours, they will perhaps like to become purchasers, too, and when the number of those who wish to be regular readers of the magazine is large enough, we may find that we can have a *monthly* instead of a *quarterly* issue.

But, if we want this, we must work for it by trying to get every lady we know to have her name put on the list of subscribers.

Those who have not joined at the commencement should ask for the *back* numbers, as well as future ones, as the serial articles will be much more intelligible and useful to the readers if studied from the beginning.

The chief event recorded in the January number was the Coronation in Westminster Abbey last June. And now the King-Emperor has visited India, and, with the Empress at his side, amid the splendours of the Delhi Durbar, has shown by gracious speech, and kindly act, how earnestly he desires the welfare of that important part of his great Empire.

The people of India have also, on their part, made it evident how true and strong are the bonds of loyalty and affection which bind them to their Sovereign. We know how heartily the ladies of India will have appreciated the sojourn of the Queen in their country; and how they will treasure in their hearts the words she addressed to them. Shall we repeat a few of them here?

Her Majesty said: "I desire to assure you all of my ever increasing solicitude for the happiness and welfare of those who live 'within the walls.' The pages of history have set forth what splendid influences for good can be brought to bear in their homes by the women of India, and the annals of its noble races are coloured by acts of devoted fealty and magnificent service, as the fruits of the lessons instilled by mothers in the hearts and minds of their children. I have learnt with deep satisfaction of the evolution which is gradually but surely taking place among the inmates of the purdah, and I am convinced that you all desire to encourage education among your children, so that they may grow up fitted to become useful and cultivated companions for their future husbands."

The little sketch of Queen Mary's life, given in this number under the title of "Our Own Queens," will be read with interest.

With all best wishes we remain,

Your affectionate friends,

THE EDITORS.

Our own Queens.

DURING the lifetime of many of our readers God has given us three good Queens, whose lives have been examples to their subjects of all that God-fearing women, and true wives and mothers, ought to be. In this magazine we give a sketch of our present Queen Mary. Next time our subject will be Queen Alexandra, and afterwards we hope to write of Queen Victoria, who was the reigning Queen and Empress over the British Empire for nearly 65 years.

HER IMPERIAL MAJESTY QUEEN MARY IN CORONATION ROBES

HER MAJESTY QUEEN MARY, Empress of India, was born in London on the 26th of May, 1867. Her parents were the Duke and Duchess of Teck. In her childhood and

நம் மகா இராணிமார்

நம் பத்திரிகையைப் படிக்கும் பெரும்பாலாருடைய ஜீவியகாலத்திற்குள்ளேயே கடவுள் நமக்கு மூன்று பெருஞ்சீலமுள்ள மகா இராணிமாரைத் தந்திருக்கிறார். அவர்களுடைய ஜீவியம் தேவதா பக்தியுள்ள பெண்மணிகள், பர்த்தாவுக்கேற்ற பதிவிரதைகள், குழந்தைகளுக்குச் சிறந்த தாய்மார், இவர்களுடைய மாதிரி இப்படியிருக்கும் என்று தம் பிரசைகளுக்குத் தெரியக் காட்டுகின்றன. இந்தச் சஞ்சிகையில் நம் இப்போதிய மகா இராணியாரான மேரி பிராட்டியாரின் சுருக்கச் சரித்திரம் சொல்வோம். அடுத்தமுறையில் அலெக்சந்திரா மகா இராணியாரையும், அதற்குப்பின் விக்டோரியா மகா இராணியாரையும்பற்றி எழுதுவோம். கடைசியில் தெரிவித்த மகா பிராட்டியார் ஏறத்தாழ 65 ஆண்டுகள் பிரிட்டிஷ் இராச்சிய மண்டலத்தில் மண்டலேஸ்வரியாய்ச் செங்கோல் செலுத்தினவர்.

மாட்சிமை வகித்த மேரி மகா இராணியாராகிய இந்திய சக்கரவர்த்தினியார், 1867-ம் ஆண்டுமேமீ 26வ லண்டனில் ஜெனனமானவர். அவருடைய பிதா மாதாக்கள் டேக்கு டியூக் பெருமானும் பெருமாட்டியாரும். அவருடைய இளமைப்பருவத்தில் அவருக்கு மே இராஜசெல்வி என்று செல்லப்பெயர் வழங்கிற்று. அவர் பிறந்த குடும்பத்தில் அவர் ஒருவரே பெண்மகள். அதனால் அவருடைய பெற்றோரும் அவருடன் பிறந்தாரும் அவரை அருமை பாராட்டி நேசித்தார்கள். நற்சீலங்களுக் குறைவிடமான அவருடைய மாதாவான டேக்கு டியூக் பெருமாட்டியார் தம் செல்வபுதல்வி யாவரிடத்தும் பட்சமும் மரியாதையுமாய் நடந்துகொள்ளப் பயிற்றினார். இவர் ஒருகாலத்திலேனும் சோம்பியிருந்தவரல்லர். ஒழிவுநேரம் கிடைக்கும்போதெல்லாம் தம் சுய கையாலேயே ஏழைகளுக்கு உடைகள் செய்வார். அதில்லாவிட்டால், ஆஸ்பத்திரிகளிலாவது வீடுகளிலாவது இருக்கிற ஏழைகளைப் பார்க்கத் தம் மாதாவுடன் போவார். ஒருநாள் தாயார் சகிதமாய் உலாவப்போகையில், இருவரும் ஒரு கிழவி சுள்ளிவிறகு பொறுக்குவதைக் கண்டார்கள். கண்டு, அவளுக்கு இருவருமே உதவி புரியப் புகுந்தார்கள். மரங்களில் பட்டு உலர்ந்திருந்த சுள்ளிகளை டியூக் பெருமாட்டியார் தம் குடையால் ஒடித்து வீழ்த்த இராஜ இளங்குமரி அவற்றைச் சேர்த்துக் கிழவிக்குக் கொடுத்தார். அவள் சுமக்கக்கூடிய அளவு விறகு சேர்த்துக்கொண்டு சீக்கிரத்திலே வீடுபோய்ச் சேர்ந்தாள். அவளுக்கோ தனக்குப் பட்சமாய் உதவிபுரிந்த பெருமாட்டிமார் இன்னார் என்பது தெரியவே தெரியாது.

1893-ல் மே இராஜசெல்வி ஜியார்ஜ் இராஜசெல்வருக்கு வாழ்க்கைப்பட்டார். அவருக்கு அப்போது யோர்க்கு டியூக் பெருமான் என்கிற பட்டமிருந்தது. அவரே இப்போது நம் ஜியார்ஜ் மகுடவர்த்தனர். நம் கருணையுள்ள மேரி இராணியார் சந்தோஷங்களையன்றிப் பல விசனங்களையும் அறிந்தவர். அவருக்கு விவாகமான சில வருஷங்களுக்குள்ளேயே அவருடைய பிதாவும் மாதாவுமான டேக்கு டியூக் பெருமானும் பெருமாட்டியாரும் காலகதியானார்கள். அதற்குச் சிலகாலத்திற்குள்ளேயே நம் அன்புக் குறைவிடமான விக்டோரியா மகா இராணியார் தேகவியோகமடைந்ததினால் எட்வார்டு சக்கரவர்த்தியார் சிம்மாசனம் ஏறினார். இதற்குள்ளே மே இராஜசெல்வியார் அநேக மக்களுக்குத் தாயாயினார். 1901-ல் அவர் யோர்க்கு டியூக் பிராணநாயகருடன் ஆஸ்திரேலியா, நியூஜிலண்டு, சிலோன் முதலிய பிரிட்டிஷ் மண்டலப் பகுதிகளைச் சந்தித்தார். அவர் போன போன இடந்தோறும் பிரசைகள் அவருக்கு அன்பு பாராட்டினார்கள்; அதற்குக் காரணம் அவர் யாவருக்கும் பட்சமும் இணக்கமுமாய் நடந்துகொண்டதேயாம். அதற்குப்பின் அவர் ஆறு மாதகாலம் தம்மை முகம்பாராமல் ஏக்கமாயிருந்த தம் அருமைப் பிள்ளைகளைப் பார்க்க இங்கிலாந்துக்கு மீண்டுவந்தார். அவரிருவரும் திரும்பி வந்தவுடன் எட்வார்டு அரசர் தம் குமாரனுக்குப் பிரின்ஸ் ஆவ் உவேல்ஸ் என்ற பட்டம் சூட்டினதால், மே இராஜசெல்வி பிரின்சேஸ் ஆவ் உவேல்ஸ் எனப் பட்டம் வழங்கப் பெற்றார். 1905-ம் ஆு உவேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் இந்தியாவுக்கு விஜயம்செய்தார்கள். அவர்கள் பம்பாயில் கரையிறங்கி, பல இந்திய ராஜாக்களைப் பார்த்து, பல பகுதிகளிலுள்ள முக்கிய நகரங்களைக் கண்டு, காராச்சிக்கு வந்து தங்கள் தேசத்திற்குச் சிந்தாயாத்திரை செய்தார்கள். சகல இடங்

youth Queen Mary was called the Princess May. She was the only girl in the family, and was much beloved by her parents and brothers. Her mother, the Duchess of Teck, was very good, and taught her daughter to be polite and kind to everyone. She was never idle, and in her spare time she made garments for the poor with her own hands, and often went with her mother to visit the sick in the Hospitals, or in their own homes. While out for a walk one morning the Duchess of Teck and the Princess May saw an old woman picking up sticks, and immediately they both began to help her. The Duchess pulled down dry sticks from the trees with her umbrella, and the Princess gathered them up and gave them to the old woman, who soon went away with as much wood as she could carry, but without knowing who the ladies were who had so kindly assisted her.

In 1893 Princess May was married to Prince George, who was then called the Duke of York, and is now King George, Emperor of India. Our gracious Queen Mary has known much sorrow as well as joy. A few years after her marriage her father and mother, the good Duke and Duchess of Teck, both died. Not long after, the beloved Queen Victoria passed away, and King Edward ascended the throne. By this time Princess May was the mother of several children. In 1901 she accompanied her husband, the Duke of York, on his visits to Australia, New Zealand, Ceylon, and other parts of the British Empire. Everywhere she went the people loved her, because she was so kind and good; but still it must have been a happy day for her when she returned to England and to her dear little children, from whom she had been separated for six months. Soon after their return King Edward conferred on his son the title of Prince of Wales, so Princess May was now known as the Princess of Wales, and in the autumn of 1905 the Prince and Princess paid a visit to India. They landed at Bombay, visited many of the Indian Rajahs, and the principal towns in the Provinces, and sailed again from Karachi in the following March. Everywhere the princes and people of India did their utmost to show their loyalty and affection; but the Princess was not satisfied with seeing only what was grand and beautiful, she also visited the hospitals, and tried to see all she could of the women and children in whose welfare she is so much interested. At Mussoorie the Princess bought some walking-sticks of a poor shop-keeper in the bazar. The other shop-keepers were very pleased, and said, "Now our brother's fortune is made. How did the Rani know that he is the poorest of us all?"

In May, 1910, the good King Edward died after a very short illness, and the Prince of Wales succeeded his beloved father as King George V., and when the days of mourning were over, King George and Queen Mary were crowned King and Queen of all the countries belonging to the British Empire. Her Majesty, though now a great Queen, is as thoughtful and kind as ever. She delights to help and comfort any who are in sorrow or need, and works with her own hands to provide for widows and orphans.

Queen Mary has now one daughter and five sons, the eldest of whom, Edward, Prince of Wales, is seventeen years old.

While this is being written, their Majesties are in India, and many Indian ladies have seen the Queen-Empress themselves. In acknowledging a beautiful gift from them, her Majesty spoke loving words which should make all mothers feel how much their influence may do in teaching their children to fear God, and to lead noble lives.

May God bless and keep our gracious Queen.

களிலும் இந்திய அரசர்களும் பிரசைகளும் அவர்களுக்குத் தங்கள் இராஜ விசுவாசத்தைப் பாராட்டினார்கள். இராஜசெல்வியார் கண்ணுக்கினியவைகளைமாத்திரம் கண்டுபோக மனதில்லாமல் ஆஸ்பத்திரிகளையும் போய்ப் பார்த்தார். அதுவுந்தவிர இத்தேசத்து ஸ்திரீகள்மேலும் பிள்ளைகள்மேலும் அன்புள்ளவராதலால், அவர்களை நேரில் அறிந்துகொள்ளச் சர்வமுயற்சியும்செய்தார். ஸ்ரீப்பட்டணத்தில் இராஜசெல்வியார் கடைவீதிக்குப்போய் ஒரு எளிய ஷாப்காரனிடத்தில் கைபிடித்தடிகள் கிரயத்துக்கு வாங்கினார்கள். அது மற்ற ஷாப்காரருக்கெல்லாம் மனோரதமாயிருந்தது. அவர்கள் மகிழ்ச்சியுள்ளவர்களாய்ச் சொன்ன சொல் இது: 'இதுமுதல் நம் நண்பனுக்கு அதிர்ஷ்டகாலம் வந்துவிட்டது. நம்முள் அவனே ஏழை என்று நம் இராஜசெல்வியாருக்கு எப்படித் தெரிந்தது?'

1910-ம் ஆு மேமாதத்தில் நம் நற்குணசீலரான எட்வார்டு மன்னர் மிகச் சிறுபோழ்து வியாதியால் மரித்தார். உவேல்ஸ் இளவரசர் அதற்குப்பின் தம் பிதாவின் ஆசனத்தில் ஐந்தாம் ஜியார்ஜ என்கிற நாமத்துடன் வீற்றார். துக்க நிவிர்த்தியான பின், ஜியார்ஜ் அரசரும் மேரி அரசியும் பிரிட்டிஷ் இராச்சிய மண்டலம் முழுமைக்கும் மண்டலேஸ்வரனும் மண்டலேஸ்வரியுமாய் முடிசூட்டப் பெற்றார்கள். நம் மாட்சிமையுள்ள இறைவியார், இப்போது பென்னம்பெரிய பதவியை அடைந்திருந்தும், முன்போலவே யாவரிடத்தும் மனம் முறிக்காத நடக்கையும் அன்புமுடையவராய் விளங்குகின்றார். துக்கம், மிடி இவற்றின் வாயிலகப்பட்டு வருந்துகிறவர்களைத் தேற்றி அவர்களுக்கு உதவியளிப்பது நம் மகாராணியாருக்கு மிக விருப்பம். திக்கற்ற பிள்ளைகள், விதவைகள், இவர்களுக்குத் தேவையானவைகளைக் கொடுப்பதற்குத் தம் சுய கையாலேயே உழைக்கிறார்கள்.

மேரி இராணியாருக்கு இப்போது ஒரே மகளும் ஐந்து ஆண்மக்களும் இருக்கின்றார்கள். ஆண்களில் தலைமகன் எட்வார்டு என்று பெயரிய உவேல்ஸ் இளவரசர். அவருக்கு இப்போது பிராயம் பதினேழு.

இந்தச் சரித்திரம் நான் எழுதிக்கொண்டிருக்கிற இந்நாட்களில் நம் மாட்சியுள்ள இறைமகனும் இறைமகளும் இந்தியாவில் வந்திருக்கிறார்கள். வெகு அநேக இந்திய சீமாட்டிகள் நம் இறைவியாரை நேர்நேரில் கண்டிருக்கிறார்கள். அவர்கள் அரசியாருக்கு அளித்த அழகிய வெகுமதியைப் பெற்றுக்கொண்ட தருணத்தில் அரசியார் அன்புள்ள வசனங்களை மொழிந்தார்கள். அவ்வசனங்கள் நம் தாய்மார் தம் பிள்ளைகள் தேவபக்தியுள்ளவர்களும் சிறந்த ஜீவியம் செய்கிறவர்களுமாவதற்கு எப்பேர்ப்பட்ட செல்வாக்குள்ளவர்களாயிருத்தல் கூடும் என்று தெரிவிக்கின்றன.

கடவுள் நம் அநுக்கிரக சிந்தையுள்ள மகா இராணியாரை ஆசீர்வதித்துக் காப்பாராக.

ஆன்மாக்கள் பூங்கா

1. அதிகாரம்

அநேக வநேக வருஷங்களுக்குமுன் காலம் என்கிற கிழப்பாட்டன் சின்னஞ் சிறு பாலகனாயிருந்தான். அப்பொழுது சில்வேனியா என்கிற ஒரு இராச்சியம் இருந்தது. அதில் செல்வமும் பராக்கிரமமும் பொருந்தின ஓர் அரசன் ஆண்டான். அவனுக்கு மூன்று பெண்களிருந்தார்கள். மூத்தவள் கட்டழகி, இரண்டாமவள் பல சிறந்த வித்தைகள் கற்றுத் தேர்ந்தவள். இவ்விருவர் புகழும் எட்டவும் கிட்டவும் இருந்த பல தேசங்களிற் சென்று பரவிற்று. கடைசியாவாள் அழகுச் சிறப்பும் வித்தைச் சிறப்புமில்லாவிட்டாலும் மேம்பட்ட குணசீலமுடையவள். அவளது அருங்குணத்தைப் பகற்பொழுதில் பட்சிகள் பாடின, இராப்பொழுதில் இளந்தென்றல் இன்னோசையிட்டு ஒலித்தது. ஆயினும் சாவுவாய்ப் பிராணியாகிய மனுஷன் இதையறியாமல் புகழ் என்னும் தூதன் சொன்னதற்கே காதுடையவனாயிருந்தான்.

சிறிது போழ்தளவிலேயே புகழ்கூறின கூற்று சமீபத்திலிருந்த ஒரு தேசமெல்லாம் தெரிந்து அங்கிருந்த யௌவன அரசனுடைய செவிகளுக்கும் எட்டிற்று. அவன் 'இச்செய்தி மெய்யானால் எனக்கேற்ற மனையாளை வேறு எங்கு தேடிப்போவேன்' என்று துணிந்து தன் இராச்சியத்தினின்றெழுந்து சில்வேனியாவுக்குப் புறப்பட்டான்.

சில்வேனியா நாட்டுக் கிழவரசன் தன்னரண்மனைக்கு அந்த யௌவன அரசன் வந்ததும் அத்தியந்த சந்தோஷத்துடன் அவனை நல்வரவேற்று

The Garden of Souls.

CHAPTER I.

LONG years ago, when old Father Time was quite a little boy, there reigned over the kingdom of Sylvania a rich and powerful king, who had three daughters. The eldest of these princesses was so beautiful, and the second so accomplished, that Fame carried their report to countries far and wide. But the youngest princess was neither lovely nor clever, and though the birds sang of her goodness and sweetness all the day long, and the breezes whispered of it at night, mortal man did not understand, and listened only to Fame's reports.

Now it so happened that ere long the news became known in a neighbouring country, and soon reached the ears of the young prince. At once he made ready to leave his kingdom and pay a visit to Sylvania.

"For," said he, "if these reports be true, where better could I seek a bride?"

Great was the joy of the aged king when he heard of the arrival of his royal guest, and many were the festivities held in his honour. And the young prince of Goldaland soon discovered that Fame had spread no idle tale, for each day the Princess Sundri appeared more beautiful and bewitching than the last, and the Princess Tara's sprightly wit and trilling, bird-like songs, astonished and fascinated him more and more. But the Princess Uttami was continually kept in the background, and her brilliant sisters scoffed at her because she lacked their accomplishments. And the nightingales confided sorrowfully to the breezes that the Princess Uttami was sad at heart.

One summer's evening the young prince rode out from the Palace grounds, and through the great pine woods of Sylvania, trying to decide which of the princesses he should choose for his bride. So deeply was he lost in thought that he did not observe whither his horse's steps were bent, and suddenly discovered that he was in a spot entirely unknown to him, and could not remember in which direction the Palace lay. The moon had now risen, and the Spirit of Night was drawing her dark mantle over hill and valley.

"Alas," cried the prince, "I must await the dawn of day, for I know not whither to turn, and darkness steals on apace."

So saying, he tethered his weary beast to a tree, and lay down on the mossy ground to rest.

Scarcely had he composed himself for sleep, when he was startled by the sound of a loud flapping of wings, and looking round beheld a most beautiful being seated on a white-winged horse. She stooped down and touched him with her glittering wand.

"Up, sir prince," she commanded in a soft, sweet voice. "I am come to bring you to the Garden of Souls. I am Atma Devi."

The prince rose in wonderment, and obeying her behest, took his seat behind her on the back of winged Fancy, and whirr—rr they rose above the pine woods, soaring through the air till at last they reached a flowery bank overlooking a most magnificent garden. The trees were tall and shady, the air was sweet with the fragrance of many flowers, and a silver river wound its way through the groves and glades.

The prince gazed with rapture and amazement at the sight.

"How happy must they be who dwell in such a garden!" he exclaimed.

"Behold!" said Atma Devi, pointing with her wand, and the prince turned.

The strange sights which met his gaze in this "Garden of Souls" must be reserved till the next chapter.

அவனுக்கு மரியாதையாகப் பல விழாக்களைக் கொண்டாடுவித்தான். புகழ் என்பவன் சொன்னது அணுவளவும் தவறாமல் மெய்யே என்று கோல்டாலாண்டு பாலிய அரசன் அநுதின அநுபவமாய் அறிந்தான். ஒவ்வொருநாளும் சுந்தரி என்கிற இராஜகுமரி கடைசியாளைவிட மேலும் மேலும் அழகோங்கிக் கண்ணைப் பகட்டும் வனப்புடையாளாயிருந்தாள். தாரை என்னும் இராஜகுமரி பேசின அதிவிநய மொழிகளும் பாடின குயிலை மருட்டும் இன்னிசைப் பாட்டுகளும் அவனை நாளுக்குநாள் மதிமயக்கிச் சொக்கிவிட்டன. உத்தமி என்னும் இராஜகுமரியோ இவர்களுக்குமுன் தலைகாட்டாமல் பின்னுக தங்கியிருக்க நேர்ந்தது. தங்களுக்கிருந்த சிறப்புகளொன்றும் இவளுக்கில்லையென்று சகோதரிகள் இவளை இகழ்ந்தார்கள். இராப்பாடிப் பட்சிகள் இளந்தென்றல்களுடைய காதில் உத்தமி தன் உள்ளத்தில் விசனமுடையவளாயிருப்பதை மெதுவாய்த் தெரிவித்தன. கோடைகாலத்தில் ஒருநாள் அவ்வரச வாலிபன் அரண்மனையை விட்டுப் புறம்வந்து சில்வேனியாவில் மிகுத்திருந்த சவுக்குக் காட்டில் புகுந்து இராஜகன்னியருள் யாரை மனையாளாய்த் தெரிந்து கொள்ளலாமென்று சிந்திக்கலானான். மனதில் ஆழ்ந்த நினைவுகளுடையவனாய்ப் போகையில், தானேறின குதிரை சென்ற வழி யறியானாய், அரண்மனைக்குத் திரும்பிவர ஏலானுயினன். இதற்குள் சந்திரோதய முண்டாயிற்று. இராவாவியானவள் தன் இருட்போர்வையை மேபெள்ளமெல்லாம் விரித்து மூடினாள்.

'அடடா, என்ன புத்திமோசம்போனேன்! இங்கு விடியுமட்டும் இருக்க வேண்டியவனாயினேன்! வழியுந் தெரியவில்லை, இருளும் கவிகின்றதே.' இப்படி அவ்விளவரசன் கூவினான். கூவி மெத்தைபோற் செறிந்திருந்த புல்மேல் உறங்குவதற்குப் படுத்தான்.

படுத்துக் கண்ணுறக்கம் வந்ததும் வாராததுமாயிருக்கையில் சத்தமாய் இறக்கைகள் அடித்த முழக்கம் கேட்டான். அதென்னவென்று சோதிக்கையில் இறக்கைகளுள்ள வெண்மைநிறமான குதிரை மீது மிக அழகுவாய்ந்த ஒரு மாதுசிரோன்மணியைக் கண்டான். அவள் குனிந்து தன் கையிலிருந்த பளபளப்பான கோலினால் அவனைத் தொட்டாள்.

'எழுந்திருமையா, உம்மை ஆன்மாக்கள் பூங்காவுக்கு'க் கொண்டுபோக வந்திருக்கிறேன்; என் பெயர் ஆத்மதேவி, இப்படியவள் இனிய மெல்லோசையாய்ச் சொன்னாள்.

அவ்வரசிளங்குமாரன் திகைப்புடையவனாய் எழுந்து அவளுடைய மனோபாவம் என்கிற செட்டைக் குதிரையில், அவளுக்குப் பிறகே ஏறி உட்கார்ந்தான். விர்ரென்று பறந்து அந்தச் சவுக்குக் காட்டைக் கடந்து ஆகாய மார்க்கமாய் ஒரு பூம்பொழில் மேட்டிலிறங்கினார்கள். அதற்கெதிரே பதிவான தாவில் மனோரஞ்சிதமான ஒரு பூங்கா இருந்தது. அதிலே நிழலடர்த்தியான நெடிய விருக்ஷங்களிருந்தன. அதின் ஆகாயமெல்லாம் பல புஷ்பங்களிலிருந்துவந்த வாசங் கமழ்ந்துகொண்டிருந்தது. அங்கிருந்த அடவிகள், தோப்புகளினூடே உருக்கி வழிந்த வெள்ளிபோன்று ஒரு ஆறு ஓடிக்கொண்டிருந்தது.

அந்தக் கண்ணுக்கினிய காட்சியை அவ்வரசகுமாரன் கண்டு கண்டு மகிழ்ந்தான்.

'இப்பேர்ப்பட்ட பூங்காவில் வசிப்போர் எப்பேர்ப்பட்ட ஆனந்த மனுபவிப்பர்!' இப்படி அவன் கூவினான்.

'பார், பார்' என்று தன் கைக்கோலினால் ஓரிடத்தைச் சுட்டி ஆத்மதேவி கூவ அவன் பார்க்கத் திரும்பினான். இந்த 'ஆத்மாக்கள் பூங்காவில்' அவன் கண்ட அற்புதக் காட்சிகளெல்லாம் அடுத்த அதிகாரத்தில் வெளிப்படும்.

கடமை தெரிந்ததாயும் அவள் செய்யக்கூடியதும்

பெண்பாலார், அவர்களுள்ளும் தாய்மார், பெரும்பாலும் ஒரு தேசத்தை கவுரவ நிலைமைக்கு உயர்த்துகிறவர்கள். தன் ஜெபங்களாலும், தன் மாதிரியினாலும், தன் செல்வாக்கினாலும், தன் முயற்சிகளினாலும் தான் பெற்ற மக்களைச் சீருள்ளவர்களாக்குவதில் மாதா செய்கிறதை இவ்வளவு என்று மதிக்க யாராலும் முடியாது. சரித்திர நூலைப் பார்த்தால் தம் தேசத்தாரை நல்ல நெறியில் முன்னின்று நடத்தினவர்கள், தம் தேசத்துச் சீர்கேடுகளைத் திருத்தினவர்கள், உலகோபகாரிகளாய்ப் பிழைத்தவர்கள், இப்பேர்ப்பட்டவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய அழகிய

A True Mother, and what she can do.

WOMEN, and especially mothers, are to a great extent the up-builders of a nation. It is impossible to over-estimate the value of a mother's prayers, her example, her influence, and her personal efforts on behalf of her children, whether boys or girls. In history one very often finds that those men who have become famous as leaders, reformers, or philanthropists, and whose beautiful and noble lives have been a power, not only in their own, but on many succeeding generations, have had mothers who have spared no pains in trying to bring them up to be what they afterwards became.

How great, then, is a mother's responsibility, how great her privilege, how great her dignity! Mothers of India, think of this. How proud you are of your little son, what rejoicings there were at his birth, what high hopes are fixed on him; but stay—what *are* your hopes for your boy? That he may get a good Government post, and earn lots of money? This, and only this? By all means aim at this, but aim also that he may be honourable, faithful, dependable, strictly truthful, and pure. If only all Indian men were thus, how different would be the condition of this dear country of ours! One has again and again heard it remarked, in villages for instance, "We wish an Englishman would manage our affairs, he would not cheat us"; "The Tahsildar Sahib won't do so and so for us because we cannot give him enough money"; "The Doctor Sahib won't give me good medical advice unless I give him five rupees"; "The Dispenser will give me only water instead of good medicine unless I pay him for it."

These may be only exceptional cases, but it is to be feared they are indeed far too common. Avarice, dishonesty, untruthfulness, disloyalty, and selfishness are some of the most prominent characteristics of many of our countrymen, who, but for these faults, might raise the whole tone of the society in which they move, and whose influence would act and re-act upon those of a lower grade. Were this influence wholly for good the Indian nation would take its place, not only amongst the richest and most civilized, but amongst the noblest of the nations of the world. High ideals, high aspirations, not only for self but for the country, if aimed at by every Indian man, would do much towards the attainment of this greatness.

India has produced some men whose lives have been an inspiration, and who have had an uplifting influence on their day and generation, as for instance, Keshub Chander Sen, Tulsi Das, Guru Nanak, Kabir, and others. These were great reformers, who aimed at purging our corruptions and raising men's thoughts on to a higher level. On whom does the formation of the character of such men depend? Generally speaking, on you mothers. Think of this. You are in a great measure responsible for the high or low standard which prevails around you, because you are responsible for the bringing up of your children in such a way as that they shall acquire habits which shall enable them to shine in all that is good and noble when they have attained to manhood and womanhood.

Now just pause a moment and ask yourselves, would you like your sons to turn out avaricious, untrustworthy, selfish, and so on, or would you like them to be upright, unselfish, and noble? Then, are you going to rise and take up your responsibilities bravely and perseveringly, regarding your children, not merely as so many playthings with which to amuse yourselves, but as precious souls to be watched over with self-sacrificing toil and care?

(*To be continued.*)

சிறந்த ஜீவியம் தம் காலத்தில் மாத்திரமல்ல தம் காலத்திற்குப் பிந்தியும் பல தலைமுறைகளுக்கு வல்லமை செலுத்திவருகின்றன. இவர்களுடைய சிறப்புக்குக் கருவிகளாயிருந்தவர்கள் பெரும்பாலும் அவர்களைப் பெற்ற மாதாக்கள். இந்த மாதாக்கள் தம் மக்கள் பின்னுற எந்த நல்ல தகைமையுள்ளவர்களாக விரும்பினார்களோ அந்தத் தகைமைக்கு யோக்கியர்களாய் அவர்களை வளர்க்க உழைப்பதற்கு அஞ்சினதில்லை.

இதினால் மாதாவுக்கிருக்கிற பொறுப்பு, மாதா வகித்திருக்கிற சிலாக்கியம், மாதாவுக் கேற்பட்ட கவுரவம் எப்பேர்ப்பட்டது! இந்திய மாதாக்களே, இதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். உன் சிறு மகனைப்பற்றி நீ எவ்வளவு பெருமை பாராட்டுகிறாய்! அவன் பிறந்தபோது நீ நடத்திவைத்த வைபவங்களென்ன, அவன் இனி என்னென்ன மேன்மை செய்வான் என்று நம்பியிருக்கிறாய்! நல்லதிருக்கட்டும், உள்ளபடிக்கு உன் மகன் இனி என்ன பதவிக்கு வர அவனைக்குறித்து இலக்கு வைத்திருக்கிறாய்? அவன் சர்க்காரில் நல்ல உத்தியோகத்தைப் பெற்று, நிரம்பப் பணம் சம்பாதிக்கவா? இதுவா? இதுமாத்திரமா? தடையில்லாமல் இந்த இலக்குவைக்கலாம்; அதிலும் அதிகமாய் அவன் நற்சீலங்களுள்ளவனும், நம்பத்தக்கவனும், வேலையில் உண்மையுள்ளவனும், யதார்த்தம் பேசப் பயப்படாதவனும், ஜீவிய சுத்தமுள்ளவனுமாயிருக்கப் பழக்கு. நம் இந்தியாவிலிருக்கிற ஆண்கள் யாவரும் இப்படி யிருப்பார்களானால், நம் தேசநிலைமை எவ்வளவோ வித்தியாசமானதாய் இருக்கும்! பின்வருமாறு சாதாரண ஜனங்கள் பேசிக்கொள்வது எங்கும், விசேஷமாய், கிராமங்களில் எத்தனையோ முறை நம் காதில் விழுந்திருக்கிறது! 'எங்கள் காரியங்களை இங்கிலீஷ் துரை விசாரிப்பாரானால் நல்லது, அவர் எங்களை வஞ்சிக்கமாட்டார்,' 'தாசில்தார் இன்னின்னபடி செய்யமாட்டார், ஏனெனில் அவருக்குத் திருப்தி செய்யக் கூடிய அளவு பணங்கொடுக்க எங்கள் கையில் இல்லை;' 'டாக்டர் துரை எனக்கு உதவுகிற வைத்தியம் செய்யமாட்டார், ஐந்து ரூபாய் அவிழ்த்துக் கொடுத்தால் தான் செய்வார்;' பணங்கொடுத்தாலொழிய மருந்து கலக்கித் தருகிறவன் மருந்துக்குப் பதில் வெறும் உதவியற்ற தண்ணீர்தான் கொடுப்பான்.'

இம்மாதிரி நடக்கை வேளாவேளைகளில் யாரோ சிலருக்குமாத்திரம் இருக்கலாம். ஆயினும், வெகு பேர் அம்மாதிரி நடந்தாலன்றி அப்படிப் பேச்சுக் கிளம்பாது. பணப்பிரியம், நாணயமில்லாத ஜீவியம், பொய் சொல்லல், இராஜாங்க விரோதம், தற்பொழிவு, இவை நம் நாட்டில் பெருமிதமான பேர்களுக்கு இருக்கிற யாவரும் காணத்தக்க குணதோஷங்கள். இந்தத் தோஷங்கள் மாத்திரம் அவர்களுக்கில்லாதிருந்தால், அவர்கள் சேர்ந்து உலவுகிற ஜனசமுதாயத்தில் மாசற்ற நல்ல நிலைமையை உண்டாக்கி விடலாகும்; மனுஷருடைய குணங்களை உயர்த்தக் கூடிய அவர்களுடைய வல்லமை—தாழ்ந்த படித்தரங்களுள்ள ஜனங்களிடத்தில் ஓயாமல் வேலை செய்துகொண்டிருக்கும் அவர்களுடைய செல்லும் வல்லமை—முற்றும் நல்ல வல்லமையாயிருந்தால் நம் இந்திய ஜனம் உலகத்தில் எல்லாரிலும் ஐசுவரியமும் நாகரீகமும் மாத்திரமல்ல மேம்பாடான குணசீலமும் பொருந்தின ஜனங்களில் ஒன்றாயிருக்கும். உயர்ந்த அடைவுகளின் மனப்படம், நல்ல சிறப்புகளைத் தனக்குமாத்திரமேயன்றித் தன் தேசத்திற்கும் சம்பாதிக்கவேண்டும் என்னும் ஆசை, இவை எல்லா இந்திய ஆடவருக்கும் இருக்குமானால் நம் தேசம் உயர்வதற்குத் தாழ்விராது.

நம் இந்தியா சில மனுஷரைப் பிறப்பித்திருக்கிறது. அவர்களுடைய ஜீவியம் மற்றவர்களுள் உயர்ந்த வைராக்கியம் மூட்டத்தக்க ஜீவியம். அவர்களிருந்த காலத்தியரை அவர்களுடைய செல்லும் வல்லமை குணவுயர்த்தியுடையவர்க ளாக்கியுமிருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்கள் கேஷப் சந்திர சேனன், துளசிதாஸ், குருநானக்கு, கபீர் முதலியோர். இவர்கள் பெரிய சீர்திருத்தங்கள் செய்தவர்கள். நம் தேசத்தில் கறைகளாயிருந்த கேடுகளை இவர்கள் நீக்கித் துப்புரவு செய்திருக்கிறார்கள். அதுவுமல்லாமல், நம் தேசத்து மனிதருடைய நினைவுகள் இருந்த கீழான நிலைமையிலிருந்து மேலான நிலைமைக்கு அவைகளை உயர்த்திவிட்டார்கள். இப்பேர்ப்பட்ட காரியசித்திக்காரரின் வல்லமை அவர்களுக்கு யாரிடமிருந்து கிடைக்கும், தெரியுமா? பெரும்பாலும் தாய்மாராகிய உங்களிடமிருந்துதான். இதைக் கெட்டியாய் மனதில் வையுங்கள். உங்கள் அக்கம்பக்கங்களிலுள்ளோரிடத்து வெளிப்படத்தெரிவது தாழ்ந்த ஒழுக்கமோ மேலான ஒழுக்கமோ, அதெல்லாவற்றிற்கும் உத்தரவாதிகள் நீங்களே. அதேன்? ஆளானபிறகு நலமும் சிறப்புமுடைய சகல குணங்களிலும் மேம்பட்டு விளங்கத்தக்க மாதிரியாய் உங்கள் பிள்ளைகளை வளர்ப்பது உங்கள்மேல் விழுந்த கடமையாதலால் தான். சற்று

Needlework Patterns.

1.—A Plain Knitted Glove.

(SMALL SIZE.)

USE 3 ply wool and two pairs of No. 17 needles.

Cast on 48 stitches and rib for 28 rounds for wrist.

First round of Hand. Knit plain, in the last two stitches knitting two stitches in each. They are for the thumb.

Second Round. Knit plain.

Third Round. Purl two, knit one, and repeat, knitting the thumb stitches plain.

Fourth Round. Like Third Round.



3.—A Plain Knitted Glove.

Repeat these four rounds throughout the hand, always knitting the thumb stitches plain. Increase in the first and last thumb stitch on every fourth round, until there are 14 thumb stitches in all, then run the latter on to a thread.

At the end of the last needle before the thumb now cast on three stitches, and on the 49 stitches now on the needle knit 16 rounds in pattern. For the first finger take the three stitches below those cast on below the thumb, the three cast on stitches and the nine following stitches. Run the remaining stitches on to a thread, and on a third needle after the nine stitches cast on four. Knit one round, narrowing twice on the cast-on stitches, knit 18 rounds plain, then narrow as follows: Knit one, knit two together, and repeat until five stitches remain. Pull the wool through them and fasten.

For the second finger. Take 6 stitches each from the outside, and the inside of the hand, pick up three stitches on the four stitches cast on for the first finger, and cast on 5 stitches for the outside of the finger. Knit two rounds, on each narrowing one on the cast on stitches, knit 24 rounds and narrow as in first finger.

The third finger is like the second, excepting that only four stitches are cast on, and 18 rounds knit plain.

For the fourth finger take the remaining stitches from the thread, pick up two stitches on those cast on for the third finger, and on the fifteen stitches thus secured knit 16 rounds and narrow.

Place the thumb stitches on two needles, and with a third needle pick up 7 stitches on the three cast on for the hand, narrow two on these cast-on stitches, then knit eighteen rounds and finish off.

For the second glove, in working the first finger take the 9 stitches before the three cast on below the thumb, the three cast-on stitches and the three following stitches.

2.—Narrow Scalloped Edge in Crochet.

Make 7 chain, into the first stitch make 3 treble, 3 chain, 1 treble. Turn with 5 chain,



4.—Narrow Scalloped Edge.

வேறு நினைவுகளை யொழித்து யோசியுங்கள். நீங்கள் பெற்ற உங்கள் குமாரர்கள் பொருளாசை, நம்பிக்கைக்குத் தகுதியின்மை, தற்பொழிவுடைமை ஆகிய இப்பேர்ப்பட்ட தோஷங்கள் உடையவர்களாயிருக்க விரும்புவீர்களா, அவை நீங்கின சற்குணராயிருக்க விரும்புவீர்களா? உங்கள் மக்களை நீங்கள் எடுத்து விளையாடுகிற பதுமைகளாக நினைக்காமல், நீங்கள் சுய ஒறுப்புடன் கவலையாய்ப் பேணி வளர்க்க வேண்டிய விலையுயர்த்தியான ஆத்துமாக்களாக மதித்து, அவ்விஷயத்தில் உங்களுக்கு எப்பேர்ப்பட்ட உழைப்பும் கஷ்டமும் வந்தாலும் பாராட்டாதிருக்கவும், அவ்வுழைப்பிலும் கஷ்டத்திலும் தளராமல் உறுதியாயிருந்து சித்திபெறவும் உங்களுக்கு மனதெழும்புமா?

(இன்னும் வரும்.)

நக்ஷத்திரங்களைப்பற்றிய சல்லாபம்

பாகம் II

நம் முந்தின சம்வாதத்தின் முடிவில், சூரியனையொத்துக் கிழக்கில் எழும்பி மேற்கில் அஸ்தமித்த நக்ஷத்திரங்களின் தொகுதியைக் கவனித்துப் பார்த்தோமே, அத்தொகுதி அஸ்தமனத்தின்பின் எங்கே போயிற்று என்று விசாரித்தோம். இக்கேள்விக்கு உத்தரம் அறிய என்னுடன் வந்து இந்தத் துறவில் இட்டிருக்கிற பெர்சிய இராட்டினம் வேலைசெய்கிற மாதிரியைப் பாருங்கள். அதில் அமைத்துள்ள தொடுப்பான சிறு பானைகள், மேலேறுவதும் கீழிறங்குவதுமாய், ஓயாமல் சுழன்றுகொண்டிருப்பதைக் காண்பீர்கள். அவற்றுள், கீழே இறங்கும்போது வெறும்பானைகளாய் வாய் கவிழ்ந்து இருந்த அதே பானைகள் மேலே ஏறும்போது வாய் நிமிர்ந்து தண்ணீர் நிறைந்திருக்கும். அவை தண்ணீரில் மறைந்திருந்த காலத்தில் நீங்கள் அவைகளைப் பார்க்கிறதில்லையானாலும் அவை வெளிப்படுகையில் அவை முன் பார்த்த பானைகளே என்று உங்களுக்கே தெரியும். இப்படியே தான் நீங்கள் அஸ்தமிக்கக் கண்ட அதே நக்ஷத்திரங்கள் எதிர்ப்பக்கத்தில் உதயமாகக் காண்பீர்கள். இதைக்கொண்டு நீங்கள் என்ன அநுமானிக்கலாம்? அவை பூமியின்கீழ் உள்ள அதின் மறுபக்கத்தில் உருண்டுகொண்டிருந்து, அவை எந்த வரிசையாய்க் கீழ்ப்போனவோ அந்த வரிசையாகவே எழும்பி மேல் வரும் என்று தான் அநுமானிக்கலாம்.

ஆ, இதென்ன! நாங்கள் நிற்கிற பூமியின் எதிர்ப்பக்கத்திலே அந்த நக்ஷத்திரங்கள் மறைந்துவிட்டனவா? என்று நீங்கள் அதிசயிப்பீர்கள். பூமிக்கு எதிர்ப்பக்கத்தின் கீழே அவை போகக்கூடியது எப்படி என்று கேட்டாலும் கேட்பீர்கள். அவை அவ்வாறு பாதையுடையனவாய்ப் போக இயலுமானல் அப்போது நம் பூமி ஒரு ஆதாரத்தின் மேல் பொறுத்து இராமல் அந்தரத்தில் நிற்கிறது என்று நம்பவேண்டியதாகும். அப்படி யிருந்தாலொழிய மற்றப்படி நக்ஷத்திரங்கள் பதிந்த ஆகாயமண்டலம் நம் பூமியைச் சுற்றிச் சுழலமுடியாது. அந்த மண்டலம் அப்படிச் சுழலுகிறதை ஒப்புக்கொண்டபின், நம் பூமி உருண்டை வடிவினது என்று ஒப்பத் தடையிராது. ஒருவேளை, 'நம் பூமிக்கு உருண்டை வடிவென்று நான் கண்ணாலே பார்த்தாலொழிய நம்பவே நம்பேன்' என்பாய். சூரியனுக்கு உருண்டை வடிவு, சந்திரனுக்கு உருண்டை வடிவு இருப்பதைப் பார்த்திருக்கிறாய். நமக்கு இப்பேர்ப்பட்ட காங்கையைத் தருகிற சூரியன் மகா பிரமாண்டமான உடம்பையுடையது என்று உனக்குத் தெரியும். சூரியனைவிட நம் பூமி எவ்வளவோ சிறிய உடம்பையுடையதாயினும் அதொரு உருண்டையென்று நம்ப உனக்கு வருத்தமாயிருக்கிறது. ஆயினும், அது உள்ளபடி உருண்டையே. இதை நீ நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி. இப்போது நம்ப வருத்தமிருந்தாலிருக்கட்டும். படிப்படியாய் நம் பாடத்தில் மேலே மேலே போகப்போக 'நம் பூமி உருண்டையல்ல' என்பதை விட்டு அது 'உருண்டையாய் இருக்கத்தான் வேண்டும்' என்று நீயே சொல்லுவாய்.

நக்ஷத்திரங்கள் பூமியைச் சுற்றிச் சுற்றிச் சுழல்வதைப் பார்க்கிறோமே, அதினால் என்ன அநுமானிக்க நேரிடும்? ஆகாயம் நம் பூமியைச் சுற்றிச் சுழல்கிறது, நக்ஷத்திரங்கள் அப்படிச் சுழல்கிற ஆகாயத்தில் இருக்கின்றன, ஆகவே, அவைகளுக்கு நடுப்புள்ளியாய் நம் பூமியிருக்கின்றது என்று இப்படி அநுமானிக்க நேரிடும். தோற்றத்தின்படி அது அப்படித் தான் அநுமானிக்கவரும். ஏனெனில், ஆகாய மண்டலம் வாஸ்தவமாய் நம்மை

make 7 treble in first space, * 3 ch. 3 tr. 3 ch. 1 tr. into next space.

Turn with 6 ch., make 3 tr. in first space, 3 ch., 1 tr. in top of 3rd tr. below, 3 ch. 1 tr. into 1st of the 7 tr. below, 3 ch. 1 tr. into 3rd tr. below, 3 ch. 1 tr. into 5th tr. 3 ch. 1 tr. into 7th tr. 3 ch. catch into lowest picot loop on previous scallop. In the case of the first scallop, end with 1 tr. into last space as there is no previous scallop to catch over to.

Turn with 1 ch., fill in each of the 7 spaces below with 2 double crochet, 4 ch. 2 double crochet, then make 3 ch. and put 3 tr. 3 ch. 1 tr. into last space.

Turn with 6 ch., make 3 tr. 5 ch. 1 tr. into first space. Turn with 5 ch., make 7 tr. in first space and repeat from *.

A Talk about the Stars. Part II.

AT the conclusion of our last "Talk" the question was asked, Where does the group of stars we have been watching, which, like the sun, rose in the east and set in the west, go to when it disappears? To answer this enquiry come and take a look at a well where the Persian wheel is working. Here you see the chain of little pots going round and round, up one side and down the other, the very same pots coming up full of water that went down empty. You know, of course, they are the same pots, though you cannot see them all the time, for they are under water for a part of the time. So just in the very same manner you can see the groups of stars you have been observing in their setting, coming up again at the other side, and you know, therefore, that they must have been moving underneath the earth in the opposite direction to come up again in the same order.

Are you very much astonished that the stars should go under where you are? You will, perhaps, ask how the stars can go under the earth, for if they do you would have to believe that the earth is resting upon nothing, to allow the sky with the stars to go round it; and if you once admit that it is so, then it is not so hard to admit that the earth may be round. But you may say, "O, no, I will never believe that the earth is round, because I do not see its roundness." You can see that the sun is round and the moon is round, and you know that the sun must be a very large body to give such heat. But, though the earth is ever so much smaller than the sun, you find it difficult to believe that it is round. Nevertheless, it is so, whether you believe it or not, and if you are not prepared to believe this yet, we shall go on step by step until you will no longer say, "it cannot be so," but "it must be so."

Now when we see and know that the stars go round and round the earth, it is as if we would say that the stars are in the sky, which is moving round the earth, and that therefore the earth must be in the centre. The sky certainly looks as if it were all round us, for we see that the half of it is above us, and we know that the other half must be below us, because the stars we have seen setting come up again on the other side the next night. But you have only been watching those stars which rise in the east and set in the west like the sun. Now if you will look towards the north you will see something else. As you leave off looking at those stars in the belt of the sun and begin carefully to observe those of the belt next it, towards the north, you will notice that the stars in that belt are to be seen for a longer time than those of the sun's belt, that is, they rise earlier and set later. What does this mean? It means that though the sun's belt is half above and half below the earth, the next belt is more above and less below the earth. In the same way the third belt towards the north is still more above and still less underneath, until, as you get further and further north, you can see that the belts have been getting

எப்பக்கமும் சூழ்ந்திருப்பதாகவே கண்ணுக்குத் தோன்றும். இதற்குக் காரணங் கேட்டால், அதின் ஒரு பாதிப்பாகம் நம் சிரசிற்குமேலே யிருக்கிறதைக் காண்பித்து, மறு பாதிப்பாகம் நம் பூமிக்குக் கீழ்ப் பக்கத்தி லிருக்கவேண்டும் என்போம். அதென்னத்தினுலெனில் ஒரு திசையில் கீழே அஸ்தமித்த நக்ஷத்திரங்கள் மறுஇரவில் எதிர்த்திசையில் மேலே எழுந்துவருகின்றனவே எனக் காண்பிப்போம். நல்லதிருக்கட்டும். அப்படித் தோற்றம் உண்டானதற்கு ஒரு காரணமிருந்தது. நீங்கள் இதுவரையில் கவனித்து அறிந்தது சூரியன் செய்கிறதுபோல் கிழக்கில் உதித்து மேற்கில் அஸ்தமிக்கிற நக்ஷத்திரங்கள் மாத்திரமே. இதை ஒரு பக்கத்தில் வைத்து, வடதிசைக்கு உங்கள் கண்களை ஏறெடுத்தால் அங்கே வேறொரு காட்சி அகப்படும். சூரியனுக்குச் சுற்றுக் கச்சைபோல் இருக்கிற வட்டையிலுள்ள நக்ஷத்திரங்களைப் பார்ப்பதைவிட்டு அதற்கு அயலிலுள்ள வட்டையிலிருக்கிற நக்ஷத்திரங்களைக் கூர்ந்து கவனியுங்கள். நான் சொல்லுகிற அயல்வட்டை தென்புறத்தது அல்ல வடபுறத்தது. இந்த அயல்வட்டையிலிருக்கிற நக்ஷத்திரங்கள் சூரியகச்சை வட்டையிலிருக்கிற நக்ஷத்திரங்களைவிட அதிகநேரமாய்க் கண்ணுக்கு அகப்படும்; அதாவது, அவை சூரியவட்டை நக்ஷத்திரங்களுக்கு முன்னுறவே உதயமாகி அவைகளுக்குப் பின்னுற அஸ்தமிக்கும். இதற்குக் காரணமென்ன? சூரிய கச்சைவட்டை பாதி பூமிக்கு மேலும் பாதி பூமிக்குக் கீழும் இருக்க, இந்த அயல்வட்டையில் பாதிக்கு அதிகமான பாகம் பூமிக்கு மேலும் பாதிக்குக் குறைவான பாகம் பூமிக்குக் கீழும் இருக்கிறதே அதற்குக் காரணம். இவ்விதமாகவே வடதிசைக்கு அணுகின மூன்றும் வட்டை இன்னம் அதிக பாகம் பூமிக்கு மேலும் இன்ன மதிகக் குறைவான பாகம் பூமிக்குக் கீழும் இருக்கும். இப்படி வடதிசையை நெருக்கி நெருக்கிப் போகப்போக வட்டைகள் மேலும் மேலும் சிறுகித் தோன்றும். அவைகளுடைய மேலும் மேலும் பெருகின பாகத்தைப் பூமிக்குமேலே இருக்கக் காண்போம். இப்படி வட்டைகளில் மேலும் மேலும் அதிகப் பாகம் கண்ணுக்குத் தோற்றமாகிறதைப் பார்த்துக் கொண்டு போகையில் ஒரு வட்டைவரும். அது முழுமையுமே பூமிக்கு மேலேயே எப்போதும் கண்ணுக்குத் தோன்றும். அது பூமிக்குக் கீழே அஸ்தமிக்கவேமாட்டாது. மேற்சொன்னவாறு போகப்போக வட்டைகள் சிறுத்துவருவதைக் கண்ணுற்று, இந்த வட்டைகளெல்லாம் ஒன்றை நடுவே வைத்து அதைச் சுற்றியல்லவா சுழலவேண்டும், அப்படி நடுவேயுள்ள நட்சத்திர மெங்கேயென்று சோதிப்பீர்கள். இந்த நக்ஷத்திரம் ஈறுங்கடைசியாய் அகப்படும். இது அசைவேயில்லாமல் ஒரே நிலையில் நிற்கும். மற்ற எல்லா நக்ஷத்திரங்களும் இந்த ஒரு நக்ஷத்திரத்தையே சுற்றிவரும். இன்னமொன்று காண்பீர்கள். போகப்போகச் சிறுகித் தோன்றின வட்டைகளிருக்கின்றனவே அவை சூரியவட்டை. ஒருமுறை சுழல்வதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கிறதோ அவ்வளவே நேரம் தாங்கள் ஒருமுறை சுழல்வதற்கும் பிடிக்கிறதைப் பார்ப்பீர்கள். இதினுல், அவை எவ்வளவுக்கு வட்டை சிறுகிப்போகின்றனவோ அவ்வளவுக்குத் தாமதமாய்ச் சுழல்கின்றன என்று திட்டமாய்ச் சொல்லலாம். வட்டைகள் என்பது இனியில்லாமல் ஒரே நடு நக்ஷத்திரம் கடைசியாய் வருகின்றது. அது சுழல்கிறதில்லை. நாள் போய் நாள் வரும், வருஷம் போய் வருஷம் வரும், ஆயினும் அந்த நக்ஷத்திரம் அசையாமல் ஒரே இடத்திலேயே இருக்கும்.

இந்த நக்ஷத்திரம் ஒருபோதும் மறையாத அநேக நக்ஷத்திரங்களுக்கு மத்தியில் இருக்கிறதினுலும், அந்த நக்ஷத்திரங்கள் இருக்கிற வட்டைகள் இந்த ஒரு நக்ஷத்திரத்தை நெருங்க நெருங்க, வரவரச் சிறுகுவதினுலும் அவைகள் உதயமாகிறதுமில்லை அஸ்தமிக்கிறதுமில்லை என்று உங்களுக்குத் தெரியும். ஏனெனில், இந்த நக்ஷத்திரக் கச்சைகள் முழுமையும் அந்த ஒரு நக்ஷத்திரத்தைச் சுற்றுவதைப் பார்க்கிறீர்கள். இந்த நடு மைய நக்ஷத்திரத்திற்கு வடதுருவ நக்ஷத்திரம் என்று பெயர். துருவம் என்றுல் ஒரு பொருள் எதைச் சுற்றிச் சுழல்கின்றதோ அதின் ஒரு முனை. திருஷ்டாந்தமாக, ஒரு ஆரஞ்சிப் பழத்தினூடே ஒரு நீண்ட ஊசியைச் சொருகினுல், அந்த ஊசி பீறி வெளிப்படுகிற இரண்டு பாகமும் முனைகள் என்னப்படும். ஏனெனில், அந்த ஊசியைச் சூழச் சமநிலையாய் அந்த ஆரஞ்சிப் பழம் சுழல்கின்றது. இதுவரையில் என்ன அறிந்தோம் என்றுல், ஆகாயமண்டலம் நம்மை எப்பக்கமும் சூழ்ந்திருக்கிறது. நாம் அந்த மண்டலத்தின் நடுமையத்தில் இருக்கிறோம்; அந்த மண்டலம் நடுவில்கொண்டு சுழல்கிற ஒரே நக்ஷத்திரம் இருக்கிறது, அதற்கு வடதுருவ நக்ஷத்திரம் என்று பெயர். ஊசியிற் கோர்த்த ஆரஞ்சிப் பழத்திற்கு இரண்டு முனைகள் இருக்கிறதுபோல் வட்ட வடிவமான ஆகாயத்திலும் இரண்டு முனை

smaller and smaller, because you can see more and more of them at once, until you come to a belt which is always above, and never below. Then, as the circles are getting smaller and smaller all the time, you think there must be some central star round which the circles are turning. At last you actually find this star, and can see that it is not moving at all; but that all the others are moving round it. But you will also see that these circles which have been getting smaller and smaller take exactly the same time to go round once as do those of the sun's belt, and therefore it is quite easy to understand that they have being going slower and slower, as they get smaller, till there is no more circle, but one centre star which does not move at all. Day after day, and year after year, you cannot see that star move, for it is still in the same place.

Now as this star is the centre of a number of stars that do not go out of your sight, and as you can see that the belts they are in are getting smaller and smaller, the nearer they are to this star, you know they are neither rising nor setting because you can see the whole of the belts going round it. This centre star is called the North Pole Star; a pole in star-language meaning one end of an axis, round which anything turns. For instance, if you push a long pin through an orange, both ends of the orange through which the pin passes would be its poles, because the orange turns evenly round that pin. We know that the sky is all round us and that we are in the middle of it, and we have found out one star round which this sky is turning in the north, and which is called the North Pole Star. But the orange had two poles, and should not the round sky have two poles also? Surely it must have. Unfortunately we cannot see the South Pole star in Northern India, though we know that there is such a thing, for the following reasons. You can see the N. Pole star high up above the earth in the Panjab, in the north, and you rightly argue that, wherever it is, the S. Pole must be directly opposite to it. But if the N. Pole is *above* the earth, the S. Pole must be *below* the earth in the other direction, so as to be directly opposite, and this you can also prove for yourself. If you look at the next belt to that of the sun towards the south, just as you did towards the north, you will find that the stars in it are a longer time underneath the earth than above it, and so on, for though the circles are becoming smaller and smaller towards the south, just as they did towards the north, they become less and less visible, because, as they get smaller, they are less and less above the earth; so that at just about the same place in the north that you can see the entire circles above the earth, at the same distance southward, these circles disappear altogether, though you can quite well judge, from what you have seen, that these entire southern circles must be moving round under the earth. The centre of those circles must be, therefore, the S. Pole, for though you cannot see it you can't help knowing that it must be there, and that the whole sky is turning like a ball round the North and South Poles.

Some Lessons from the Divine Teacher.

IN our last number we spoke of the great Teacher, Who came into the world to be the Word or true revelation of God to our souls. Much of His teaching was given in parables, or short stories with a meaning in them.

Just as fruit, or grain, is often inclosed in a husk or pod, so do precious lessons lie wrapped up in these simple narratives. Shall we look into one of these truth-pods now and see what it contains?

Here is the story. A farmer went out one day to sow his field. As he threw out the seed some of it fell on the path, where the

கள் இருக்கவேண்டியதில்லையோ? இருக்கவேண்டியதுதான். இந்தியாவின் வடபாகங்களில் தென் துருவ நக்ஷத்திரம் கண்ணுக்கு அகப்படாது. ஆயினும் அது இருக்கத்தான் வேண்டும். பஞ்சாபிலிருக்கிறவர்கள் வடதுருவ நக்ஷத்திரம் பூமிக்கு மேலே உயர்ந்து வடதிசையில் தெரிவதைப் பார்க்கலாம். அதற்கு நேர் எதிர்த்திசையில் தென் துருவ நக்ஷத்திரம் இருக்கவேண்டும் என்று சரியான நியாயத்துடன் நீயே நிதானித்துக்கொள்வாய். அது கண்ணுக்கு அகப்படாவிட்டாலும் இந்த நிதானிப்புச் சரிதான். ஆனால் ஒன்று கவனிக்கவேண்டும். வடதுருவம் பூமிக்கு மேலே உயர்ந்து இருக்க, தென்துருவம் எதிர்த்திசையில் பூமிக்குக் கீழே தாழ்ந்திருக்கும். இது இப்படித்தான் இருக்கவேண்டுமென்பதை நியாயத்துடன் நீயே நிதானித்துக்கொள்ளலாம். தெற்குத் திசை நோக்கிச் சூரிய வட்டைக்கு அடுத்த வட்டையைப் பார்த்தால், அதிலுள்ள நக்ஷத்திரங்கள் பூமிக்கு மேலே உயர்ந்து தெரிகிற கால அளவுக்கு அதிகப்பட்ட நேரம் அவை பூமிக்குக் கீழே இருப்பது விளங்கும். இவ்வாறே அதற்கு அடுத்துவரும் மற்ற வட்டைகளும் என்றறிக. ஏனெனில், தெற்கு நோக்கிப் போகப் போக, வடக்கு நோக்கிப் போன காலத்திற்போலவே, வட்டைகள் அளவு சிறுகிச் சிறுகித் தோன்றும். மேலும் அந்த வட்டைகள் வரவரச் சிறுகிப்போவதால் அவை வரவரக் கண்ணுக்கு அகப்படுவதும் குறைந்துவரும். அதற்குக் காரணம் என்னவென்றால், அவை பூமிக்கு மேலே உயர்ந்து தோன்றும் தோற்றம் வரவரக் குறைந்து போவதேதான். இவ்வாறு, வடபுறத்தில் எவ்வளவ தொலைமுதல் நீங்கள் நக்ஷத்திர வட்டைகள் பூமிக்குக்கீழ் மறையாமல் பூமிக்குமேல் உயர்ந்திருக்கக் காண்கிறீர்களோ, தென்புறத்தில் அவ்வளவே தொலைமுதல் நக்ஷத்திர வட்டைகள் முற்றமே தெரியாமல் மறைந்துபோவதைக் காண்பீர்கள். ஆயினும், நீங்கள் முன் நிதானித்து அறிந்ததுபோலவே இப்போதும் இந்தத் தெற்கத்திய முழு வட்டைகள் பூமிக்குக்கீழ் மறைந்தாலும் சுற்றிக்கொண்டேதான் இருக்கவேண்டும் என்று நிதானிக்கலாம். இந்தத் தெற்கத்திய வட்டைகள் நடுமையத்தில் வைத்துச் சுற்றுகிற நக்ஷத்திரத்திற்கே தென்துருவம் என்று பெயர். இது கண்ணுக்கு அகப்படாது. ஆயினும், அது இருக்கத்தான் வேண்டும் என்றும் நாம் பார்க்கிற ஆகாயமண்டலம் முழுமையும் ஒரு பந்துபோல் வட தென் துருவங்களைச் சுற்றியே சுழல்கின்றன என்றும் நீங்கள் நிதானிக்காமலிருக்க முடியாது.

தெய்வபோதகர் சொன்ன சில பாடங்கள்

முந்தின இலக்கத்தில் பெரிய போதகரைப் பற்றிச் செய்தி சொன்னோம். அவர் நம் பூவுலகில் வந்து நமக்கு வார்த்தையாய், அதாவது, நம் ஆத்துமாவுக்குக் கடவுள் தம்மை வெளிப்படுத்துகிற வெளிப்படுத்துகையாயிருந்தார். அவர் சொன்ன உபதேசம் பெரும்பாலும் உவமைகளுள் அடக்கிச் சொல்லப்பட்டது. உவமைகள் என்பன அர்த்தமுள்ள சிறு கதைகள். ஒரு மரத்துப் பழம் தோட்டுக்குள்ளும் ஒரு தானியமணி உமிக்குள்ளும் பொதிந்திருக்குமே, அதுபோலவே இந்தச் சிறு கதைகளுள் விலையுயர்ந்த பாடங்கள் பொதிந்திருக்கும். இப்பேர்ப்பட்ட உண்மையுள்ளடக்கமுள்ள ஒரு கதையைப் பிட்டுப் பார்ப்போமா?

இதுதான் கதை:—ஒரு குடியானவன் ஒரு நாள் தன் வயலில் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில் சில நடப்புப்பாதைமேல் வீழ்ந்தின. அங்கே தரை கால் மிதிப்பினால் கெட்டியாய் இருந்தது. இதினிமித்தம் விதைகள் மேலேயே கிடந்தன. அவற்றைப் பட்சிகள் பொறுக்கிப்போயின. அந்த வயலின் இன்னொரு பாகத்தில் கற்பாறையிருந்தது. அந்தப் பாறைமேல் கொஞ்சம் மண் தூவினதுபோல் படிந்திருந்தது. அங்கே விழுந்த விதை சுறுக்காய் முளைத்தும் அந்த ஆழமில்லாத மண்ணில் முளைத்த பூண்டுகளுக்குப் போதுமான ஈரமில்லாமையால் அவை வேரோடமாட்டாமல் சூரிய வெப்பத்தில் பட்டுப்போயின.

விதைத்துக்கொண்டேபோகையில் இன்னொரு வகை நிலம் வந்தது. களைகளும் முட்புதர்களும் அந்த மூலையில் நீக்கப்படாமல் இருந்தன. அவ்விடத்தில் விழுந்த கோதுமை சுறுக்காய் முளைத்தும் காட்டுப் பூண்டுகள் அதிலும் தீவிரமாய் முளைத்து கோதுமை விட்ட கதிர்கள் பக்குவமாகி முற்றுமுன் ஓங்கி மண்டி அவற்றை நெருக்கிவிட்டன.

குடியானவன் பட்ட பாடெல்லாம் முற்றும்பாழாகவாபோயிற்று? அப்படியல்ல; அந்த வயலில் ஒரு பாகம் நன்றாய் உழுது களை நீக்கியிருந்தது. அங்கே

soil was hard and trodden down, so the grains lay on the surface, and were soon picked up by the birds. In another part of the field there was stone (kankar) underneath and a little earth at the top. The seed which fell there sprang up quickly, but as the shallow ground contained no moisture for the plants, they could not root properly, and in the heat of the sun they all withered away.

As the seed continued to be scattered it found yet another lodging place—a corner where the weeds and briars had not been cleared out. The wheat there grew up fast enough, but the jungle plants grew still faster, and became so thick and strong that they choked the wheat before the fruit could come to perfection.

Was the farmer's toil all in vain, then? No; one part of his field had been well ploughed and weeded. The seeds which were cast there sank down into the deep, soft soil. After a time appeared the green blades, and finally full ears of corn ready for the farmer's sickle.

Now what is the hidden meaning of all this?

The Master Himself explained it, so there can be no mistake in the interpretation.

The field is the human heart. And Who is the Master and Owner of it? Who can it be but the God Who has created us, Who has made us for Himself, and expects us to render to Him fruits of righteousness?

But, for fruit, there must be seed, for the heart, like the soil in nature, cannot of itself produce what the owner requires from it. The possessor of the field has provided the seed. It is His own holy word—the Bible—containing His message of truth to the whole world. You, too, can hear and read it, and as you do so the seed is being sown in your heart. It has been proved again and again to be the right seed by the harvest it produces. There is *wrong* seed, too. Don't let that come into your field, or some day you will be sadly disappointed.

Is it enough, then, simply to *hear* the word of God's truth? Will the *sound* of it save us? No, the harvest may fail through fault in the ground. This is what the parable teaches us. In three parts there was failure. The first was hard and down-trodden. So is the heart of him who hears but heeds not. Man's enemy, always on the watch like the birds, causes the thoughtless one to forget the teaching, and there is no fruit of repentance or faith in the life. The second piece of ground pictures to us the hearer who listens gladly, and begins to obey, but when those around laugh at him and make trouble, he is afraid and gives up, so he, too, remains fruitless.

The third piece resembles one who lets the teaching sink into his heart, but the cares and the pleasures of this world, like the thorns, leave no room for it to work, and it all comes to nought.

How sad! But all was not failure. The fourth piece produced a harvest, and repaid the farmer for his toil. Some there are who not only hear the word, but take care to understand it, and with honest and true hearts keep hold of it, till it works in them all that God desires to see in them of the fruits of holiness.

We are told that when the Lord Jesus Christ comes into the world again He will gather the wheat into the garner, but the chaff He will burn up with unquenchable fire. Dear friend, when you read this will you ask yourself this question. Which piece of ground is *my* heart like? Is the seed there living and growing? and will my fruit be ready when the Lord of the Harvest comes to ask it of me?

விழுந்த விதைகள் ஆழ்ந்தழுது புழுதியாடின அந்தப் பகுதியில் கீழே பதிந்தன. சிலநாட்பின் பச்சிலைகளும் கடைசியில் மணிநிறைந்த கதிர்களும் தோன்றி அறுப்புச்குப் பக்குவமாயிருந்தன.

இந்தக் கதைக்குள் மறைந்திருக்கிற பொருள் என்ன?

இந்தக் கதைக்கு ஆண்டவர் தாமே அர்த்தம் சொல்லியிருப்பதால் அது பிசகாயிராது.

இங்கே சொன்ன வயல் மானிட இருதயம். அதற்குச் சொந்தக்காரன் யார்? அது நம்மை யுண்டாக்கின கடவுளைத்தவிர வேறு யாராயிருக்கலாகும்? அவர் நம்மைப் படைத்தது தமக்காகவே. நாம் புண்ணியம் என்கிற கதிர்களை அவருக்குக் கொடுக்க விரும்புகிறார்.

கதிர் கொடுக்கவேண்டுமானால் நிலத்திலே விதை விதைக்கவேண்டும்: விதைக்காத நிலம் சொந்தக்காரன் விரும்புகிற பலனைத் தானாகவே தர முடியாதல்லவா’ அதுபோல நம்முள்ளமும் தானாகவே கனி தரமுடியாது. நம்முள்ளத்துக்கு வேண்டிய விதையை அதற்குள் உடையவரே விதைத்திருக்கிறார். அது அவருடைய திருவசனமே. அதாவது, திருச் சத்தியவேதமே. அதிலே முழு உலகத்துக்கும் அவர் விளம்பரம்செய்கிற சத்தியம் அடங்கியிருக்கிறது. நீயும் அதைக் கேட்கவும் படிக்கவும் கூடும். அப்படி நீ செய்கையில் அது விதைபோல் உன் இருதயத்தில் விழும். அந்த விதையிலிருந்து விளைகிற பலனினால் அது சரியான விதையே என்று திரும்பத் திரும்ப ரூபிக்கப்பட்டிருக்கிறது. தப்பான விதையுங்கூட இருக்கிறது. இது உன் உள்ளத்தில் விழவொட்டாதே; அப்படிச் செய்யாவிட்டால் ஒருநாளில் நீ விசனப்பட நேரிடும்.

தேவன் தெரிவிக்கிற சத்தியத்தைக் காதால் கேட்பதுமாத்திரமே போதுமா? அந்தச் சத்தியத்தின் தொனிமாத்திரம் நம்மை இரட்சிக்குமா? இரட்சிக்காது. நிலத்தின் தோஷத்தினால் விளைச்சல் கெட்டுப்போகுமே. இதுவே இந்த உவமை நமக்குப் போதிக்கிற பொருள். நிலத்தின் மூன்று பாகங்களில் விளைச்சல் தவறினது. முதற்பாகம் மிதியுண்டு கடினமாயிருந்தது. வசனத்தைக் கேட்டும் சிந்திக்காதவனுள்ளம் அப்படிப்பட்டதே. விதையைப் பட்சிக்கக் குருவிகள் காத்திருப்பது போல் மனுஷனுடைய சத்துரு சிந்திப்பில்லாதவன் கேட்டதை மறக்கச் செய்கிறான். அதினால், கெட்ட வழியைவிட்டுத் திரும்புதல், தேவசொல்லில் நம்பிக்கை வைத்தல், இவை முதலான கனிகள் அவனுடைய ஜீவியத்தில் உண்டாகிறதில்லை. இரண்டாம் நிலம் பிரியமாய்க் கேட்கிறவனுடைய உள்ளப்படம். அவன் கேட்டபடி செய்யத் துவக்குகிறான். அப்போது அக்கம்பக்கத்தார் பார்த்து நகைத்தாலும், துன்பமெழுப்பினாலும் அவன் பயந்து விட்டுவிடுகிறான். அதினால், அவனும் பலனில்லாதவனாயிருக்கிறான்.

மூன்றாம் நிலம் கேட்ட உபதேசம் தன் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிய இடங்கொடுத்தவனைக் காண்பிக்கிறது. ஆகிலும், இவ்வுலகத்தின் கவலைகளும், இன்பங்களும், நிலத்தில் கூட முளைத்த முட்புதர்களைப்போல, கேட்ட வசனம் வேலைசெய்ய விடாததினால், அவனும் வியர்த்தனாகிறான்.

ஐயோ, இதென்ன பரிதாபம்! ஆகிலும் எல்லாம் வியர்த்தமாகவில்லை. நாலாம் நிலம் நன்றாய் விளைந்து குடியானவன் பட்ட பிரயாசைக்குப் பயன் தந்தது. சிலர் வசனத்தைக் கேட்பதோடே விடாமல், அதின் பொருள் விளங்கிக்கொள்ளக் கவலையாயிருந்து, அதை நல்ல உண்மையுள்ள இருதயத்திலே பேணி வைத்துக்கொண்டு, பரிசுத்தம் என்பதின் கனிகள் என்னவோ அவையெல்லாம் தேவன் விருப்புகிற பிரகாரம் தங்களில் உண்டாக்கப்படச் சிரத்தையெடுப்பார்கள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகத்துக்குத் திரும்ப வரும்போது, அவர் கோதுமை மணிகளைக் களஞ்சியத்தில் சேர்த்துப் பதரை அவியாத அக்கினியால் சுட்டுப் போடுவார் என்று நமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பிரிய சிநேகிதியே! இதைப் படிக்கையில் உன்னைப் பின்வரும் கேள்வி கேட்பாயா? என் உள்ளம் எந்த மாதிரி நிலம்? அதில் போட்ட விதை உயிராயிருந்து வளருகிறதா? விளைச்சலுக்கு எசமான் வந்து கேட்கும்போது என் கனி தயாராயிருக்குமா?

3C
Y15m2,N12
N12-1

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

His Imperial Majesty

KING GEORGE V,

in Coronation Robes.